24-1-1994

# ஏகாதிபத்திய வழியில் டி.பி.-ஐ.ஐ.தே.மு. தலைவர் குற்றச்சாட்டு!

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 11 இதழ் 342
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-1-1994

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னர் இருந்த ஏகாதிபத்திய நிலை மீண்டும் தோன்றியுள்ளது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இன்று ஏகாதிபத்திய வழிமையே கடைப்பிடித்து வருகிறார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ஏ. சி. குணரட்ன இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து திரு. குணரட்ன பி. பி. சிக்கு தெரிவித்ததாவது.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க.வில் இணைவதில் கருத்து வேறுபாடு

(கொழும்பு)

திரு. காமினி திசநாயக்காவும், திரு ஜி. எம். பிரேமச்சந்திராவும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டாலும், நாம் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொள்ளத் தயாராக இல்லை.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் திரு. ஏ. சி. குணரட்ண இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி போன்ற ஓர் அரசுக்கு ஆதரவு கொடுத்து, அதனுடன்

(4ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் 'பிரபா'வை அங்கீகரிக்கப்பட்ட தலைவராக ஏற்கவேண்டும்!

## தொண்டமான் சுதந்திரக் கட்சிக்கு நிபந்தனை!!

(கொழும்பு)

தமிழ்மக்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனை ஏற்றுக்கொண்டால் மட்டுமே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு தாம் உதவ முடியும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் நிபந்தனை விதித்துள்ளாராம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு நெவில் பெர்னாண்டோ, பாணந்துறையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பான அறிவித்தலை திரு. எஸ். தொண்டமான், சிறிலங்கா சு. கட்சி தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு விடுத்துள்ளதாகவும் திரு. நெவில் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார். (க-இ)

## காமினி—பிரேமச்சந்திர போக்கில் அதிருப்தி

(கொழும்பு)

திரு. காமினி திசாநாயக்காவும், திரு. ஜி. எம். பிரேமச்சந்திராவும் தாம் ஐக்கிய தேசியக்கட்சியில் இணையப் போவதாக இதுவரை உத்தியோக பூர்வமாக எமக்கு அறிவிக்கவில்லை.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித்தலைவர் திரு. ஏ. சி. குணரட்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் ஐ. ஐ தே. முன்னணியைச்சேர்ந்த சந்திரஹாஸ்மதி இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில்:

ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக செயல்பட்டு நாட்டில் ஜனநாயகத்தை ஏற்

(4-ம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தல்; மட்டக்களப்பில் இன்று பாதுகாப்பு மாநாடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் தற்போதைய மேற்கொள்ளப்பட்டுவருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இது குறித்த உயர் மட்ட மாநாடு ஒன்று மட்டக்களப்

(4-ம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணெயுடன் மாகோ வருகிறது

(கொழும்பு)

4, 560 பீப்பா மண்ணெண்ணெயுடன் கொழும்பிலிருந்து புறப்பட்ட 'மாகோ' கப்பல் இன்று பருத்தித்துறையை சென்றடையும் என அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் நேற்று அறிவித்தது. (க-இ)

## காமினி ஐ.தே.க.வில் சேர ஒரே நிபந்தனை விதிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்வதானால் தனது கட்சியை கலைத்துவிட்டே வரவேண்டும் என ஐ. தே. கட்சியின் பொதுச்செயலர் சிறிசேனகுரே நிபந்தனை விதித்துள்ளார்.

'வீரகேசரி' பத்திரிகைக்கு அவர் அண்மையில் வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளையில் திரு. காமினி திசநாயக்காவை ஐ. தே. கட்சியில் சேர்த்துக்கொள்ள

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்துக்கு உணவுப் பொருள்கள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

யாழ். மாவட்ட மக்களுக்குத் தேவையான உணவுவகைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்தும் கப்பலில் அனுப்பி வைக்கப்படும் என்று அரசு நேற்று அறிவித்தது.

கடந்த டிசம்பர் மாதத்திற்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் வெளிச்சக்கூண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரை நோக்கி ஆடி அசைந்த வண்ணம் வெளிச்சக் கூண்டு ஒன்று பிரகாசமான வெளிச்சத்துடன் நேற்று வந்தது.

நேற்று இரவு 9-00 மணியளவில் வந்த இவ் வெளிச்சக் கூண்டினை பொது மக்கள் பலரும் பார்த்தனர்.

மண்டைதீவு இராணுவத்தினர் இவ்வெளிச்சக்கூண்டினை ஏவியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (க - இ)

## பேர்னாட் திலகரட்னவுக்கு மீண்டும் தூதுவர் பதவி

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் செயலர் பேர்னாட் திலகரட்ன இலங்கையின் புதிய தூதுவராக மீண்டும் புதுடில்லியில் பதவியேற்கவுள்ளதாக கொழும்பு 'தமிழ்' அரசசார்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இவரது பதவியேற்பு பெரும்பாலும் மே மாதமளவில் இடம் பெறலாம் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கைத் தூதுவராக டாக்டர் நெவில் கனகரட்ன கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. க-இ

## விமானி இல்லாது இயங்கும் ஹெலி! ஜப்பானில் கண்டுபிடிப்பு!!

(டோக்கியோ)

விமானி இல்லாது இயங்கும் ஹெலிகொப்டர் ஒன்றை ஜப்பான் கண்டு பிடித்துள்ளது. டோக்கியோ பல்கலைக்கழகம் இந்தப் புதிய ரக ஹெலிகொப்டரை உற்பத்தி செய்துள்ளது.

இந்த ஹெலிகொப்டர் அண்மையில் வெற்றிகரமாக இயங்கிக் காண்பிக்கப்பட்டது

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - தளபதிகள் பதவிக்கு பௌத்தர்களையே நியமிக்கவேண்டும்

### அரசமைப்பு திருத்தத்துக்கு ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி, பிரதம நீதியரசர் மற்றும் படைகளின் சகல தளபதிகளும் பௌத்தர்களாக இருக்க வேண்டும் என அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்படவேண்டும்.

அரசியலமைப்புச் சட்டத்தின் ஐந்தாவது பிரிவின் 54-வது ஷரத்தில் இது தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அரசியலமைப்பு திருத்தம் சம்பந்தமாக நியமிக்கப்பட்டிருக்கும் தெரிவுக்குழுவுக்கு ஸ்ரீலங்கா தேசப்பிரேமி முன்னணி என்ற அமைப்பு இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

### மணிவாசகம்

மனிதன் ஆணவமுள்ள மனிதன்; சொற்ப அதிகாரத்தை அணிந்து கொண்டவன் இறைவன் முன்னிலையில் கற்பனைக்கு அடங்காத தந்திரங்களையெல்லாம் செய்கின்றான். அதைக் கண்டு தேவர்களும் கண்ணீர் வடிக்கின்றனர்.

—ஜேக்ஸ்பியர்

## நமது நோக்கு

### பிரித்தாளும் தந்திரமா?

வடகிழக்கு மாகாண சபைக்கு மூன்று பிராந்திய அலுவலகங்கள் அமைக்க ஆலோசிக்கப்படுவதாக ஒரு செய்தி வந்துள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருமலைக்கு ஒன்றும், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகியவற்றிற்கு ஒன்றும், யாழ். மாவட்டத்திற்கு ஒன்றும் எனப் பிராந்திய அலுவலகங்கள் நிறுவ உத்தேசிக்கப்படுகின்றது.

ஒன்றாயிருக்கின்ற வடகிழக்கை, தமிழர் தாயகத்தை, மூன்றாகப்பிரித்து ஆளலாம் என்ற நோக்கமோ?

இதே வேளை, வடகிழக்கு மாகாணசபை அமைச்சுகளின் எண்ணிக்கையைக் குறைக்கவும் திட்டமிடப்படுகின்றது.

இறந்த இறைமையை மீட்டெடுத் தமிழர்கள் போராடிவரும் வேளையில் அரசியல் தீர்வுக்கு வழிகாணாது இராணுவ பலத்தோடு ஆக்கிரப்பைத் தொடரலாம் என அரசு எண்ணுகிறது; பிரித்தாளும் தந்திரத்தைப் பிரயோகிக்கிறது!

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்ற பரந்த மனப்பான்மையில் ஊறித்திளைத்த தமிழர்கள் இனவுணர்வை இழந்துவிட்டார்கள் என்ற தவறான நினைப்பா?

தமிழகத்திலே தமிழர்களைக் கூறுபோட்டு, ஆக்கிரமிப்பாளர்கள் ஆண்டு வந்ததெல்லாம் பழையகதை. சேர, சோழ, பாண்டியர்களாகப் பிரிந்து நின்றதும், அதனால் விளைந்த கேடுகளும் மறக்கக் கூடியனவா?

நாயக்கர் ஆட்சி தமிழகத்திலே பரவியபோது 32 பாளையங்கள் இருந்தன இப்படிப் பாளயங்களாகப் பிரிந்து நின்ற குறுநில மன்னர்களை எளிதில் அடக்கி விட்ட விசுவநாத நாயக்கர் போட்ட திட்டமென்ன?

மேலும் 40 பாளையங்களை உருவாக்கி, தமிழகத்தை 72 பாளையங்களாக்கி விட்ட காரணத்தால் ஒற்றுமை குறைந்து இன உணர்வு மழுங்கடிக்கப்பட்டது!

அண்மையிலே 'ஐலண்ட்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதிய ஒருவர் இதனை நினைவுபடுத்தி, இன்றும் தமிழரைப் பிரித்தாள வேண்டும் என ஆலோசனை கூறியுள்ளார்.

நாம் விழிப்பாயிருக்க வேண்டாமோ? வரலாறுகளைப் படித்து, பாடங்கள் பெறும் நாம், விட்ட பிழைகளை மேலும் விடலாமா?

இன உணர்வு பெறுவோம்; பிரித்தாளும் தந்திரங்களைத் தவிடுபொடியாக்குவோம்!

# எமது சொத்துக்களில் கல்வி மிகமுக்கியமானதாய் உள்ளது

## — இளங்குமரன் உரை —

(யாழ்ப்பாணம்)

எமது சொத்துக்களில் கல்வி முக்கிய இடத்தை வகிக்கிறது. தொழிலாளர் கற்கை நெறிச் சான்றிதழ் பெறும் மட்டத்தில் மட்டும் நின்றுவிடாது பட்டப்படிப்பு வரை மேலோங்கிச் செல்லவேண்டும் இந்த வாய்ப்பினைத் தவறவிடாமல் எமது மக்கள் ஒவ்வொருவரும் இந்தக் கற்கை நெறியில் கூடுதலாக கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற தொழிலாளர் கல்விக் கழகத்தின் 'துலங்கல் மூன்று' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக தொழிலாளர் கல்விக் கழகத் தலைவர் திரு. வே சிவநேசன் தலைமையில் நடைபெற்ற இத்தவிழாவில் திரு. இளங்குமரன் தொடர்ந்து பேசுகையில்:-

இந்தக் கற்கை நெறியானது இன்றைய காலகட்டத்தில் எமது மக்களுக்கு தொழில் சார் பதவிகளை மேலும் விருத்தி செய்வதற்கு உந்து சக்தியாக உள்ளது. இதில் தொழில் புரிவோர் கூடுதல் ஆர்வம் காட்டவேண்டும்.

இந்தக் கற்கை நெறியின் தேவைகள் செயற்பாடுகள் பற்றிய விபரங்களை இந்த நூலில் எடுத்துக்காட்டவேண்டுமென்றும் எதிர்காலத்தில் இது மேலும் சிறப்புப்பெற வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா பேசுகையில்:- கொழும்புப் பல்கலைக்கழகங்களில் தொழிலாளர் கற்கை நெறி நடைமுறையில் இருந்து வந்துள்ளது. இதில் ஏராளமான மாணவர்கள் சேர்ந்து பயன் பெற்றுள்ளார்கள். இப்படியான ஒரு தொழிலாளர் கற்கை நெறி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நடாத்தப்பட வேண்டுமென்ற எமது விடாமுயற்சியால் இங்கு இதை நடாத்துவதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியது.

இதன் மூலம் எமது மக்கள் பயன்பெற வேண்டும். இதற்காக என்னாலான சகல ஒத்துழைப்பையும் வழங்குவேன் என்றும் அவர் தனது உரையில் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் பேசும்பேசுகையில்; இன்றைய நெருக்கடி மிக்க காலகட்டத்தில் தொழிலாளர் கற்கை நெறி ஏனைய பல்கலைக்கழகங்களைப் போல யாழ். பல்கலைக்கழகத்திலும் நடைபெற்று வருவது போற்றப்படவேண்டியது. எமது மக்கள் பெறும் ஒவ்வொரு பயிற்சிநெறிகளும் எமது நாட்டுக்கும், மக்களுக்கும் உந்துசக்தியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்

162-இ

## ஆண்டு இரண்டு புதிய பாடத்திட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

1993-இல் ஆண்டு ஒன்றுக்கு ஆரம்பிக்கப்பட்ட புதியபாடத்திட்டம் 1994-ம் ஆண்டு இரண்டிற்கு விரிவுபடுத்தப்படவிருக்கிறது. இதற்கான அறிமுக விளக்கச் செயலமர்வு நாளை 25-ம் திகதிசெவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நல்லூர்லுள்ள கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் இவ்வமர்வு நடைபெறும்.

யாழ்ப்பாணம் தெற்கு, வடக்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த அனைத்து ஆரம்பக் கல்வி, ஆரம்ப விஞ்ஞான/கணித முதன்மை ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

-சி

# வைத்தியர் வேலைநிறுத்தம் 138 நோயாளிகள் மரணம்!

## பங்களாதேஷில் சம்பவம்

(டாக்கா)

பங்களாதேஷில் கடந்த பத்து நாட்களாக வைத்தியர்கள் வேலைநிறுத்தம் செய்து வந்ததால் மருத்துவ உதவியின்றி 138 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களின் இந்த வேலைநிறுத்தம் கடந்த வெள்ளிக்கிழமை கைவிடப்பட்டது. வைத்தியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக 138 அப்பாவி நோயாளிகள் பலியானது தொடர்பாக மனித உரிமைகள் அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

- சி

## தெருக்கூத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலே நடாத்தப்படவுள்ள 3வது கதிர் வேளாண்மைப் போட்டியிலே கூடுதலான பங்குகொள்ளச் செய்யும் நோக்கோடு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இதனை வலுவடையச் செய்ய வைக்கும் நோக்கோடு வதிவிட வேளாண்மையின் அவசியம் தொடர்பான தெருக்கூத்து ஒன்றினையும் தயாரித்து நடாத்தி வருகிறது.

-சி

## உலர் உணவு முத்திரைகள்

(யாழ்ப்பாணம்)

'றுகுணு' கப்பலில் கொண்டு வரப்பட்ட இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண உலர் உணவு முத்திரைகள் தரம் பிரிக்கப்பட்டு பிரதேச செயலர்களுக்கு விநியோகிப்பதற்காக தயார் நிலையிலுள்ளன.

எனவே. சகல பிரதேச செயலர்களும் சனி, ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களில் 154, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள புனர்வாழ்வுப் பிரிவிலிருந்து இம் முத்திரைகளைப் பெற்று இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திட்டப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (சி)

## சம்பளம் வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். மாவட்ட ஊழியர்களுக்கு கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. —72

# மேலும் பல ஆங்கில ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

மேலும் பல ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். போட்டிப் பரீட்சைகள் மூலம் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட அடிப்படையில் மாகாண அரச சேவைக்கு அமைவாக தேசிய பாடசாலைகளிலும் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும். (சி)

## இன்று

(அரியாலை)

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய குருமனையில் இன்று திங்கட்கிழமை பங்கு சபையின் கூட்டம் பங்குத்தந்தை அருட்திரு. ஜே. நிக்கலஸ் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது. —59

0 0 0

(யாழ்ப்பாணம்)

தனைமாழி — கொக்குவில் ஞானவைரவர் கோவில் அலங்கார உற்சவம் இன்று 24-ந் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தினமும் இரவு இசை நிகழ்ச்சியும், "சிவபுராணம்" என்னும் பொருளில் திரு. ஆறு திருமுருகன் நடத்தும் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். —ம

0 0 0

(பண்டத்தரிப்பு)

சில்லாலை புனித கதிரைமாதா ஆலய நூற்றாண்டு விழா இன்று திங்கட்கிழமையன்று சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. —72

0 0 0

(யாழ்ப்பாணம்)

அதிபர்களுக்கான கூட்டம் இன்று மாலை 2 மணிக்கு முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது.

# சமசன் குடியிருப்பில் தொற்றுநோய் அபாயம்

(ஆனைப்பந்தி)

அரியாலை சமசன் குடியிருப்பில் தற்போது செங்கண்மாரி நோய் பரவி வருகின்றது. இதுவரை சுமார் ஐம்பது பேர் வரை இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் 'வீட்டு வைத்தியம்' செய்தே நோயைக் குணப்படுத்தி வருவதாகவும், குடியிருப்பு வாசிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் காய்ச்சல், அம்மை நோய், வயிற்றோட்டம் என்பனவும் ஒரு சிலரிடையே பரவியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (100-சி)

# உவர் நில பரீட்சார்த்த நெற்செய்கை வெற்றி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உவர் நில பரீட்சார்த்த நெற்செய்கைத் திட்டம் வெற்றியளித்துள்ளதாக கோப்பாய்வடக்கு-மத்தி கமநலசேவைகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த உவர்நிலப் பிரதேசத்தில் பரீட்சார்த்த முறையில் விதைக்கப்பட்ட நெல்வகை எதிர்பார்த்த விளைச்சலைக் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் அறுவடை இன்று 24-ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் வடக்கு மத்தி நெற்செய்கைத் திட்ட வயலில் வைபவரீதியாக நடைபெறவுள்ளது.

-162-இ

> உணவுக்காய் பயிரிடுவோம
> எம் ஈழத்தை உயர்த்திடுவோம

## இராசிபலன்

24-1-1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு தை 11)

துவாதசி: முன்னிரவு 8-33 வரை, மிருகசீரிடம்: நள்ளிரவு 12.2 வரை, அமிர்தசித்தயோகம், சமநோக்கு. இராகுகாலம்: காலை 8-6 முதல் 9-36 வரை, சுபநேரம்: நண்பகல் 12-36 முதல் 2-6 வரை.

மேடம்: தொழில் மனத்தாங்கல், கடன்சுமை, நண்பர் உதவி.

இடபம்: முயற்சி அனுகூலம், தானதர்மம், மனமகிழ்ச்சி.

மிதுனம்: சகோதர பகை, குடும்பப் பிரிவு, அகால உணவு.

கடகம்: பணியாள் உதவி, வாக்குவன்மை, புதிய பதவி.

சிங்கம்; தொழில் ஆலோசனை, காரியபலிதம், சுபச் செலவு.

கன்னி: தடுமாற்றம், இஷ்டர் நட்பு, அதிகாரிகள் இனம்.

துலாம்: பணிந்துபோதல், திடீர் மாற்றம், மனக்குழப்பம்.

விருச்சிகம்: சாமர்த்தியம், தொழில் லாபம், புதிய உறவு.

தனுசு: தியாக சிந்தை, மாதாவழி நன்மை, கடமை உணர்வு.

மகரம்: கடனால் ஏற்பட்ட கவலை, வாக்குப்பகை, அச்சம்.

கும்பம்: இடம் பெயர்வு, அமைதிக்குறைவு, வீண் சிரமம்.

மீனம்: உறவினர் வருகை, கலைஞானம், உற்சாகம்.

— ஜோஸ்யர்

பொஸ்னியாவில்

# ஷெல் தாக்குதல் 6 சிறுவர் பலி

(சரஜேவோ)

பொஸ்னியாவின் தலைநகர் சரஜேவோ நோக்கி நடத்தப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் ஆறு சிறுவர்கள் கொல்லப்பட்டனர். மூன்றுக்கும் அதிகமான சிறுவர்கள் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் மூன்று சிறுவர்களும், மூன்று சிறுமிகளும் அடங்குவர். இச்சம்பவம் ஐ. நா. பாதுகாப்புச் சபை செயலகத்திலிருந்து 200 மீட்டர் தூரத்தில் நிகழ்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# போதைவஸ்து கடத்துவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு போதைப் பொருட்களைக் கடத்துகிறவர்களின் தொகை அதிகரித்து வருவதாக போதை வஸ்துப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர். எம். கே. பிறேமானந்த தெரிவித்துள்ளார்.

1991-ம் ஆண்டு 14,525 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. 1992-ம் ஆண்டு 36,126 கிலோ ஹெரோயினை 9705 பேர் கடத்தி இலங்கைக்கு கொண்டு வந்துள்ளார்கள். 1993 ம் ஆண்டு டிசம்பர் வரை 40580 கிலோ ஹெரோயினை 9329 பேர் கடத்தினார்கள்.

1992-ம் ஆண்டு 9614 பேருக்கு எதிராக போதைப் பொருள் கடத்தல் சம்பந்தமான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ம-இ)

# அதிகாரப் பரவலாக்கல் சிறந்த ஜனநாயக வழி — ஜனாதிபதி

(கொழும்பு)

அரசாங்கத்தையும், மக்களையும் இணைப்பதற்கான சிறந்த வழிமுறை, அதிகாரப் பரவலாக்கல் ஆகும் என்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நாடாளுமன்ற அதிகாரப் பரவலாக்கல் அனுபவம் சம்பந்தமான மாநாட்டிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது: இலங்கையின் அரசியல் நடைமுறைகளில், அதிகாரப் பரவலாக்கல் ஒரு கட்டாய அம்சமாக இருக்கின்றது.

அதிகாரப் பரவலாக்கலுக்கு இரண்டு பிரதான விடயங்கள் காரணிகளாக உள்ளன. நிர்வாகத்தை நாட்டு மக்களிடம் எடுத்துச் செல்வதும், நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துவதும் அந்தப் பிரதான காரணிகளாகும்.

இது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபார்சுகளை அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றது என்றார். ம-இ

விமானி இல்லாது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பியூட்டரின் உதவியுடன் தன்னியக்க முறையில் இந்த ஹெலிகொப்டரை ஒருவர் தரையில் இருந்து இயக்க முடியும்.

இந்த ஹெலிகொப்டரின் நீளம் ஆறு மீட்டராகும்.

தொலைக்காட்சி கமிரா ஒன்று இந்த ஹெலிகொப்டரில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் உதவியுடன் தரையிலுள்ள கட்டுப்பாட்டாளர் இதனை இலகுவாக இயக்க முடிகிறது.

இயற்கை அழிவுகளான வெள்ளம், நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு, காட்டுத்தீ போன்ற அனர்த்தங்கள் பற்றிய தகவல்களை இந்த ஹெலிகொப்டரைப் பயன்படுத்தி தெளிவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த ஹெலிகொப்டர்களை விரைவில் வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யவும் ஜப்பான் தீர்மானித்துள்ளது. -இ

ஐ.தே.க.வில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இணையமுடியாது. ஐக்கிய தேசியக் கட்சி இன்று கடைப்பிடித்துவரும் கொள்கைகளே இதற்குக் காரணம் என்றும் திரு. குணரட்ண மேலும் தெரிவித்தார். -இ

உள்ளூராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பில் இன்று நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க, பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா உட்பட பாதுகாப்பு உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர் என கூறப்பட்டது. (க-இ)

ஏகாதிபத்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏகாதிபத்திய நிலையில் இருக்கும் ஐ. தே. கட்சி போன்ற ஒரு கட்சியுடன் இணைவதற்கு ஐ. ஐ. தே முன்னணி எப்போதும் இடம் கொடுக்காது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பிரதமராக இருந்த போது நாட்டுக்காக உழைத்தார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் பிரேமதாசாவின் கொலைக்குப்பிறகு அவர் ஜனாதிபதியாக பதவியேற்ற பின் இந்த நிலை மாறியுள்ளது.

திரு. விஜேதுங்கா முன்னர் சேவையாற்றியதுபோல இப்போது கடமையாற்ற அமைச்சரவை அவருக்கு இடம் கொடுப்பதில்லை. அமைச்சரவையில் உள்ள குறிப்பிட்ட சில அமைச்சர்கள் இதற்கு முட்டுக்கட்டையாக உள்ளனர்.

எனவே முன்னர் இருந்த ஏகாதிபத்திய அதிகாரம் இப்போது தலையெடுக்க ஆரம்பித்து விட்டது. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவும் இந்த வழியில் தான் இப்போது செல்வதாக கருத வேண்டியுள்ளது என்றார்.

யாழ். மாவட்டத்துக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் பின் இதுவரை 7,200 மெற்றிக் தொன் மாவும், 3,200 மெற்றிக் தொன் சீனியும் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து கோமாக் கப்பலில் 2,000 மெற்றிக் தொன் மாவும், 500 மெற்றிக் தொன் அரிசியும், 700 மெற்றிக் தொன் சீனி, பருப்பு, பயறு, சோயா என்பன தற்சமயம் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளையில் கொழும்பிலிருந்து மற்றொரு கப்பலில் 3,000 மெற்றிக் தொன் அரிசி, மா, சீனி, பருப்பு, பால் உணவு, புடவை வகைகள் அனுப்பப்படுவது. தனியார்துறை வர்த்தகர்கள் இப்பொருட்களை யாழ். குடாவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ருகுணு கப்பலில் வடபகுதிக்குத் தேவையான உரம் மற்றும் கட்டடப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. க-இ

# குப்பிவிளக்கு தீப்பற்றி இளம்பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

குப்பிவிளக்கு எண்ணெய் விட்டபோது அது தீப்பற்றி எரிந்ததால் எண்ணெய் விட்டவர் உடலில் தீப்பற்றி உடல் பூராகவும் எரிந்து படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் கோவில் வீதிப் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த வி. செல்வமதி (வயது 18) என்ற இளம் பெண்ணே எரிகாயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

காமினி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பெரிதும் விருப்பம் கொண்டுள்ளதாகவும் தனது அரசியல் எதிரிகளை வீழ்த்தும் ஒரு முயற்சியாகவே ஜனாதிபதி இம்முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-இ)

ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்புத் திருத்தம் சம்பந்தமாக இந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஆலோசனைகளிலேயே, இவ்வாறான ஆலோசனை ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோரைப் பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதி தெரிவு செய்யவேண்டும் எனவும் இந்த அமைப்பு மேலும் சிபாரிசு செய்துள்ளது. இ

காமினி-பிரேமச்சந்திர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த பாடுபடுவோம் என்று ஐ. ஐ. தே. மு. தலைவர்கள் அன்று மக்களுக்கு வாக்குறுதி அளித்தனர்.

ஆனால் இன்று இந்தத் தலைவர்கள் தமது வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு மக்களை நிர்க்கதிக்கு உள்ளாக்கிவிட்டனர்.

லலித் அத்துலத் முதலியின் கொலைக்கு ஐ. தே. க. பொறுப்பு என நாம் கூறுகிறோம்.

அப்படியான ஒரு நிலையில் இருந்துகொண்டு நாம் ஐ. தே. கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது கூட நீதியானதல்ல என்றார். (இ)

# பலாலியிலிருந்து ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம்!

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் புன்னாலைக்கட்டுவன், இரும்பமடி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளையில் மாதகல் இராணுவ முகாமிலிருந்தும் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. —இ

# பிரேமதாச இருமுறை கொல்லப்பட்டார்

(கொழும்பு)

கடந்த நத்தார் புதுவருட தினத்தில் கொளுத்தப்பட்ட பட்டாசு வகைகளுள் பெரும்பான்மையானவை பிரேமதாசாவின் வர்ணப் புகைப்படம் அச்சிடப்பட்ட கடதாசியில் சுற்றப்பட்டிருந்ததாம்.

பட்டாசு கொளுத்தப்பட்ட இடங்களில் எல்லாம் பிரேமதாசாவின் இந்த வர்ணப்படம் சிதறிச்சிதைந்து நாலாபுறமும் காணப்பட்டதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிரேமதாசா ஒருமுறை அல்ல இருமுறை கொலைசெய்யப்பட்டுள்ளார் என இதனைப் பார்த்த மக்கள் பேசிக் கொண்டதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. —இ

# துப்பாக்கிமுனையில் அரசியல் நடக்கிறது -- மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

துப்பாக்கிமுனையில் நடைபெறும் அரசியலுக்கு இன்னும் முடிவு ஏற்படவில்லை. இரகசிய உலகில் இருந்து கொண்டு, அரசியல் வன்முறைகளை இன்றும் பலர் தூண்டி வருகின்றனர்.

ஹம்பாந்தோட்ட மாவட்ட எம். பி. மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

லங்காதீப பத்திரிகைக்கு அரசியல் வன்முறை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

சூரியகந்த படுகொலைகளை வெளிக்கொண்டுவர முயற்சி செய்த சட்டத்தரணி மீது கொலைப்பயமுறுத்தல் மேற்கொள்ளப்பட்டது துப்பாக்கியால் அவரது உயிருக்கு உலை வைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது

துப்பாக்கி முனையில் அரசியல் நடைபெறுவதையே இது எடுத்துக்காட்டுகிறது. (இ)

★ குடும்பச் சண்டை

# கத்தி வெட்டில் முடிந்தது இருவருக்கு வெட்டுக்காயம்

(யாழ்ப்பாணம்)

குடும்பச் சண்டை முற்றி அது சகலன்மார்களுக்கிடையில் கத்தி வெட்டுடன் முடிவடைந்தது.

கோண்டாவிலில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிருஷ்ணா வரதராசா (வயது 38), இராசையா திலானந்தராசா (வயது 32) ஆகிய இருவரும் வெட்டுக்காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திலானந்தராசா என்பவர் தமது மனைவியை அடித்துத் துரத்திவிட்டு, மீண்டும் அவரைத் தொடர்ந்து சென்று அவர் இருந்த அவரது சகோதரி வீட்டுக்குச் சென்று தமது தோட்டைத் தரும்படி கேட்டுச் சண்டை தொடர்ந்ததாகவும். அதனை அடுத்து சகோதரியின் கணவர் தலையிட்டு தீர்த்து வைக்க முற்பட்டவேளை சண்டை திசைமாறி கத்தி வெட்டு இடம் பெற்றதாகவும் இதனால் இருவருமே வெட்டுக் காயங்களுக்கு இலக்கானதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# மரநாய் தொல்லை

(மானிப்பாய்)

நவாலிப் பகுதியில் மரநாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது.

நள்ளிரவு வேளையில் மரங்கள் மீது தாவிப் பாய்ந்து திரிகின்ற கொண்டிருக்கும் கோழிகளைப் பிடித்துச் செல்கின்றன. தனது கோழிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு போகின்றன. மேற்கொண்டு கோழிகளை வளர்க்க முடியாதிருப்பதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். -71

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B